அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்!

# திருச்சியில் மாநில வேளாண்மை கண்காட்சி!

## ஜூலை 27 முதல் 29 வரை நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 12-
கடந்த மூன்று ஆண்டுகளாக வேளாண்மைக்கான தனி நிதிநிலை அறிக்கையின் மூலம் பல நூறு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. 2023-24-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் நவீன தொழில்நுட்பங்கள், புதிய இரகங்கள், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டும் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை விவசாயிகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்களிடையே ஏற்படுத்தும் வகையில், 2023-24 ஆம் ஆண்டில் மாநில வேளாண் கண்காட்சி திருச்சியிலும், உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனங்கள், வாழை மலர்களுக்கான கண்காட்சி சென்னையிலும், பலாவுக்கான கண்காட்சி பண்ருட்டியிலும் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

கடந்த 8.07.2023 மற்றும் 9.07.2023 ஆகிய தேதிகளில் சென்னையில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான கண்காட்சி முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. வேளாண் வணிகத் திருவிழா 2023 மிக வெற்றிகரமாக நடைபெற்றது. இதில் ரூபாய் 2.5 கோடி மதிப்பிலான மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் விற்பனை ஆகியுள்ளது. அச்சமயம், இது போன்ற கண்காட்சிகள் விவசாயிகளுக்கு பயன்பெறும் வகையில் நடத்தப்பட வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள்.

இதன் தொடர்ச்சியாக, ஜூலை 27-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி முடிய திருச்சியில் மாநில வேளாண் கண்காட்சி (வேளாண் சங்கமம்) நடைபெறும். இதற்கான முன்னேற்பாடுகள் குறித்த கூட்டம் நேற்று முன்தினம் (10.07.2023) தலைமைச் செயலகத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விவசாயிகளுக்கு தேவைப்படும் விதைகள், தென்னங்கன்றுகள் மற்றும் பழ மரக்கன்றுகள் ஆகியவற்றை காட்சிப்படுத்துவதுடன், அவற்றை விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்திட வேண்டும் எனவும், விவசாயிகளுக்கு தேவைப்படும் அனைத்து வேளாண் இயந்திரங்களையும் காட்சிப்படுத்தி நடவடிக்கை எடுத்திட வேண்டும் எனவும், விவசாயிகளுக்கான அனைத்து திட்டங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் வகையில் கண்காட்சி அமைத்திட வேண்டும் எனவும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தங்கள் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என அறிவுறுத்தினார். அதிக அளவில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

விவசாயிகளுக்கான புதிய தொழில்நுட்பங்கள், மின்னணு விற்பனை, வேளாண் காடுகள், உயரிய தோட்டக்கலை தொழில்நுட்பம், நவீன வேளாண் இயந்திரங்கள், வேளாண் ஏற்றுமதி போன்ற தலைப்புகளில் கருத்தரங்கம் நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மைத் துறை ஆணையர் முனைவர் இல.சுப்பிரமணியன், சிறப்புச் செயலாளர் முனைவர் இரா.நந்தகோபால், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர் எஸ்.நடராஜன், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி முகமையின் செயல் இயக்குநர் (பொ) த.அன்பழகன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் மருத்துவர் ஆர்.பிருந்தாதேவி, வேளாண் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் இரா.முருகேசன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## இந்திய தேசத்தில்

# திராவிட அரசியலை ஆட்சியில் அமர வைப்பார் முதல்வர்!

என் இனிய தமிழ் சொந்தங்களே.......!

அரசியலில் அதிகார துஷ்பிரயோகம் எப்போது ஆரம்பிக்கும்? எதிரியை நேர்மையாக எதிர்கொள்ள முடியாத போது! கொள்கைகளால் கொள்கைகளை எதிர்கொண்டு வெற்றி காண முடியாத நிலை ஏற்படும் போது! இதுவரை ஒன்றிய அரசின் சன்மார்க்க - சனாதன அரசியலுக்கு நேரடியாக எதிரான அரசியல் மார்க்கம் மக்கள் ஏற்றுக் கொள்ளும் விதமாக எதுவுமே சொல்லப்படவில்லை! அதனால் அக்ரஹார அரசியல்வாதிகள் பெயருக்கு மக்களை மாற்றுவதற்காக ஒரு சிலரை முன்னால் நிறுத்தி உதாரணமாக ஜனாதிபதி, பிரதமர், ஓரிரு அமைச்சர்கள் -மற்றவை அனைத்துமே ஆரிய வகையறாக்கள்! இந்த சதி வலையை சிதறடிக்கும் விதமாக நமது தமிழக முதல்வர் சனாதன - சன்மார்க்க அரசியலுக்கு எதிராக அரசியல் உண்டு. அது திராவிட அரசியல் என பிரகடனம் செய்தார்!

ஏழை இந்தியர்களின் கனவுகளை நினைவாக்க -வேற்றுமைகள் களையப்பட - ஜாதிகள் நீங்கி சமதர்மமும் சம நீதியும் கிடைத்திட ஒரே வழி திராவிட அரசியல் தான் என்பதனை 60 சதவீத இந்திய மக்கள் வரவேற்கின்ற நிலை வளர்ந்திருக்கிறது! இது ஒன்றிய அரசுக்கு வயிற்றிலே புளியை கரைத்திருக்கிறது! அமைதிப் புரட்சி திராவிட அரசியல் என்ற வார்த்தை மூலமாக இந்தியாவில் உருவாவதை புரிந்து கொண்ட ஒன்றிய அரசு அதற்கு விதை போட்ட தமிழ்நாட்டையும் முதல்வரையும் பல வழிகளில் குறிவைத்து தாக்க ஆரம்பித்தது! அதிகார துஷ்பிரயோகம் தாறுமாறாக அரங்கேற ஆரம்பித்தது!

ஆளுநரின் அதிகார வரம்பு மீறிய செயல்கள் வலுக்கட்டாயமாக தமிழ்நாட்டிற்கு திணிக்கப்பட்ட வட இந்திய முதலாளிகள் வட இந்திய தொழிலாளர்கள் சில மத அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், இத்தியாதி ஏராளம்! எல்லாவற்றையும் எமது தமிழ் இன மக்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்! அவர்களுக்குத் தெரியும் போராட்டம், புரட்சி என்று வீதிக்கு இறங்கி விட்டால் சட்டம் - ஒழுங்கு பிரச்சினை எனச் சொல்லி ஆட்சி அபார்ஷன் செய்யத் துணிவார்கள்! வேடன் இடமிருந்து மீட்டு வந்த புள்ளி மானை வேங்கையின் முன்னால் துள்ளி விளையாட விட்டுவிடுவார்களா தமிழர்கள்? தற்போது காவி கட்சி அச்சம் கொண்ட கட்சியாக மாறி ஆளுநர் மூலமாக இன்னல்களை விளைவிக்கிறது! அத்தகைய கட்சிக்கு அடையாளச் சின்னமாக பாண்டிய மன்னனின் செங்கோல் எதற்கு? புதிய நவீன பாராளுமன்றம் தான் எதற்கு? இதனை நான் கேட்கவில்லை தமிழர்கள் கேட்கிறார்கள்!

சுதந்திரத்தைப் பெற்றுத் தந்ததோடு என் கடமை முடிந்தது என்று தேசப்பிதா அண்ணல் காந்தியார் நினைத்திருந்தால் அல்லது ஒதுங்கிப் போயிருந்தால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டு இருப்பாரா? இன்றைய தமிழ் மக்கள் இதனை சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது அல்லவா? அண்ணல் காந்தி சுட்டுக் கொல்லப்பட்டது ஆளுநர்களாலும் இல்லை... ஆட்சி அதிகாரங்களாலும் இல்லை! ஆனால் சுட்டுக் கொல்லப்பட்டார்....ஏன்? எதற்கு? மத அரசியல் இந்திய மக்களை பிரித்து வைக்கக் கூடாது. மத துவேசத்தை மக்கள் மனதிலேயே விதைத்து விடக்கூடாது என்பதற்காக தேசபிதா சுதந்திரத்திற்கு பின்னாலும் போராடினார். ஆனால் பாவிகள் தேசபிதாவுக்கு தந்த பரிசு என்ன? அன்று மத வெறியர்களின் குறி தேசபிதா மீது இருந்தது! இன்று அவர்களின் ஆதரவு கட்சி ஒன்றிய அரசின் ஆட்சி கட்டிலில் அமர்ந்திருக்கிறது! மூன்றாவது தடவையாகவும் அது ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்து தேசத்தை சேதப்படுத்த எண்ணுகிறது! அந்த எண்ணத்தில் மண்ணைத் தூவி இந்திய மக்களை விழிப்படையச் செய்யும் திராவிட அரசியல் என்ற ஜனநாயக பிரமாஸ்திரத்தை கையில் எடுத்தார் நமது முதல்வர்!

சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் 39 தொகுதிகளை தன் சொந்த முயற்சியால் வென்றெடுத்த நமது முதல்வரை பற்றி கவலையே படாத ஒன்றிய அரசு இன்று அவரைப் பார்த்து அஞ்சுகிறது! அதனால் தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு அரசுக்கு அதன் நிர்வாகத்துக்கும் கண்மூடித்தனமான இன்னல்களை விளைவிக்கிறார்கள்! வாய் கசப்பை போக்க நாக்கிலேயே தேன் தடவலாம். உலக தமிழர்களின் உள்ளம் மகிழ்ந்திட வள்ளுவன் குறளை பேசலாம். அதனால் தமிழ்நாடு அரசுக்கு எதிராக செயல்படுகின்ற அதிகாரமற்ற ஆளுநர் செய்யும் சட்ட விரோதமான செயல்களை மறைத்து விட முடியாது. தமிழ்நாடு அரசை பல வழிகளில் செயல்பட விடாமல் தடை போட்டு வருவதை புரிய முடியாத முட்டாள்களா தமிழர்கள்? எல்லாம் என் தலைவிதி என்று தலையிலே அடித்துக் கொண்டு மூலையிலே உட்காருகின்ற தமிழனை இன்று பார்க்க முடியாது.

அதே சமயம் தனக்கு எதிராக பின்னப்படுகின்ற சதி வலையை அறியாமல், மூர்க்கத்தனமாக வீதியிலே இறங்கி வீணான போராட்டங்களை நடத்துகின்றவனாகவும் தமிழன் இன்று இல்லை. ஒன்றிய அரசினாலோ அவர்கள் ஏஜெண்டுகளினாலோ ஏற்படுத்தப்படும் இன்னல்களினால் கோபப்பட்டோ உணர்ச்சிவசப்பட்டோ எதிர்க்கத் துணிந்து அவர்கள் எதிர்பார்க்கின்ற சட்டம் - ஒழுங்கு பிரச்சினையையும் நமது தமிழர்கள் செய்து விடமாட்டார்கள். ஏன் எதற்கு என்ற கேள்விகளை கேட்டு எதனை எப்படி சமாளிப்பது என பகுத்தறிந்து செயலாற்ற கற்றுக் கொடுத்திருக்கிறார் பெரியார்.

விதை நெல்லை தமிழன் சேமிப்பானே தவிர அதனை வேக வைத்து சமைத்து சாப்பிட்டு விடமாட்டான். கடமை. கண்ணியம். கட்டுப்பாடு என்பதையெல்லாம் கற்றுக் கொடுத்த பேரறிஞர் அண்ணா வழி நடப்பவன் தமிழன். கத்தியை தீட்டுவதற்கு பதிலாக புத்தியை தீட்டி பழக்கப்பட்டவன் தமிழன். குரைக்கின்ற நாய் தன்னை வம்புக்கு இழுக்கிறது. அதனிடம் கோலை நீட்டி கோபத்தை வளர்க்கக்கூடாது என்பதனை அறிந்தவன் தமிழன்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஜனநாயகத்தைப் பற்றி முழுமையாகத் தெரிந்தவன் தமிழன். Abraham Lincoln said.... Democracy is government of the people.... By the people... For the people... And it is not definitely a government by the governor. சட்டமன்றம் நாடாளுமன்றம் நீதிமன்றம் மக்கள் மன்றம்... இவற்றின் அதிகாரங்களையும் அதற்கான அணுகுமுறைகளையும் இன்றைய தமிழன் நன்கறிந்தவன். மதிப்போடு அனைத்து தர மக்களையும் பாதுகாக்க வேண்டிய நமது உயிருக்கு மேலான சுதந்திரமும் ஜனநாயகமும் இன்றைய ஒன்றிய அரசின் ஏவஞ்சப் போக்கினால் உருக்குலைந்து போவதையும் கவனித்து வருபவன் தமிழன். எதிரியின் மடமையை போக்கி... தன் கடமையை செவ்வனே செய்வதில் வல்லமை படைத்தவன் தமிழன். முயற்சியும் கிளர்ச்சியும் எழுச்சியும் இனத்தின் வளர்ச்சிக்கு எப்படி பயன்படுத்த வேண்டும் என்ற சூத்திரத்தை கலைஞரிடம் கற்றவன் தமிழன்.

பதவி. அதிகாரம். மதம். பணம் இந்த நான்கின் சக்தியை கொண்டு சுதந்திரத்தை சூறையாடுபவர்களை எதைக் கொண்டு அடக்க வேண்டும் என்பதனை கற்றுக் கொண்டவன் தமிழன். அன்பினால் இணைவோம். அனைவரும் ஒன்று என்ற அன்பு மார்க்கத்தை போதித்த அண்ணல் காந்தியை மத ஆதிக்க வெறிதான் அழித்தது என்பதனை நன்கு அறிந்தவன் தமிழன். அந்தக் கொலைகாரப் பாம்புகளை தனிமைப்படுத்தி வெற்றி கண்டவன் தமிழன். இன்றும் நாளையும் என்றும் பெரியார் - அண்ணா - கலைஞர் ஆகியோர் வழி நடக்கும் நமது முதல்வர் இந்திய தேசத்தில் திராவிட அரசியலை ஆட்சியில் அமர வைப்பதை அனைவரும் பார்க்கின்ற நாள் வந்து கொண்டிருப்பதை யாருமே மறுக்க முடியாது.

**வி.செ.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்





மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தமிழ்நாட்டில் முதன்முறையாக சேலம் மாவட்டம், காடையாம்பட்டி, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவ திட்டத்தினைத் தொடங்கி வைத்து, சிறுநீரக செயலிழப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் பரிசோதனைப் பெட்டகத்தினை செவிலியர்களுக்கு நேற்று முன்தினம் (10.07.2023) வழங்கினார். உடன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா,மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.சவுண்டம்மாள், முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் முதன் முதலாக

# சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சேலம், ஜூலை 12-
சேலம் மாவட்டம், காடையாம்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக "சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம்" நேற்று முன்தினம் (10.07.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

இதில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த நிதிநிலை அறிக்கையின்போது சட்டப்பேரவை 110 விதியின் கீழ் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் பல்வேறு அறிவிப்புகளை அறிவித்தார்கள். அதனை ஒவ்வொன்றாகச் செயல்படுத்தும் வகையில், சிறுநீரக செயலிழப்பை தொடக்க நிலையிலேயே கண்டறியும் பரிசோதனை தமிழ்நாட்டில் முதல் முறையாக சேலம் மாவட்டம், காடையாம்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைத்தில் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் நேற்று முதல் செயல்படுத்தப்படவுள்ளது.

சிறுநீரக செயலிழப்பு, மாரடைப்பு மற்றும் புற்றுநோய் இந்த மூன்று நோய் பாதிப்புகளும் தமிழ்நாட்டில் மட்டுமல்ல உலகளவில் அச்சுறுத்தும் நோய்களாக உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப, இம்மூன்று நோய்களுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நோய் வருவதற்கு முன்பே அதிலிருந்து தற்காத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளும், நோய் பாதித்தவர்களை பாதுகாக்கின்ற வகையிலும் பல்வேறு திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் சிறுநீரக பாதிப்பை தொடக்க நிலையில் கண்டறிந்தால் பாதிக்கப்பட்ட நபரை எளிதாக குணப்படுத்த இயலும். இதுவே, நோயின் தன்மை அதிகரித்து சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டு விட்டால் டயாலிசிஸ், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை போன்ற பல்வேறு நிலைக்குச் செல்ல வேண்டிய சூழல் ஏற்படும்.

### தமிழ்நாட்டில் சிறப்பான திட்டம்

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை என்பது மூளைச்சாவு அடைந்த நபரிடம் இருந்து சிறுநீரகத்தை தானமாகப் பெற்று அதை பொருத்த வேண்டும். இதில் இரத்த வகை இருவருக்கும் பொருத்தமாக இருக்க வேண்டிய நிலையுள்ளது. இவ்வாறு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. தமிழ்நாட்டில் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டு பலர் சிறுநீரக தானத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்நிலை வருவதற்கு முன்பே அந்த நோயின் பாதிப்பை தடுப்பது என்பது ஒரு அரசின் கடமை என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் எங்களுக்கு அறிவுறுத்தப்பட்டு "சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம்" என்கிற சிறப்பான திட்டத்தை இன்றைய தினம் தமிழ்நாடு முழுவதும் துவங்கி உள்ளோம்.

சிறுநீரகத்திலிருந்து வெளியேறும் புரதத்திலிருந்து சிறுநீரக செயலிழப்பை கண்டறியும் பரிசோதனை திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள 8,213 அரசு துணை சுகாதார நிலையங்கள், 2,286 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்புர ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்களிலும் ரூ.2 கோடி மதிப்பீட்டில் சிறுநீரக பாதிப்பு கண்டறியும் பரிசோதனை பெட்டகம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் காடையாம்பட்டியில் இந்நிகழ்ச்சியின் வாயிலாக தொடங்கி வைக்கப்பட்டதன் மூலம் சேலம் மாவட்டத்திற்கு பெருமை சேரும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, சேலம் மாவட்டம், காடையாம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் "சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம்" தொடங்கி வைக்கும் அடையாளமாக, ஆரம்ப நிலையிலேயே சிறுநீரக செயலிழப்பைக் கண்டறியும் பரிசோதனைப் பெட்டகத்தினை இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செவிலியர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. பெ.மேனகா, மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.சவுண்டம்மாள், முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மா.மதிவேந்தன் - ஏ.கே.பி.சின்னராஜ் எம்.பி - ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ. - எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலை!

# திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் ரூ.100 கோடி மதிப்பிலான பணிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அடிக்கல் நாட்டி, திறந்து வைத்தார்!

நாமக்கல், ஜூலை 12 -
நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அரசு மருத்துவமனையினை ரூ.23.00 கோடி மதிப்பீட்டில் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு இணையாக மேம்படுத்த கூடுதல் மருத்துவமனை கட்டடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா, ரூ.80.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணிக்கம்பாளையம் அரசு துணை செவிலியர் பயிற்சிப்பள்ளி மாண வியர் விடுதி கூடுதல் கட்டிடம் திறப்பு விழா நிகழ்ச்சி திருச்செங்கோடு அரசு மருத்துவ மனை வளா கத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ், திருசெங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு திருச்செங்கோடு அரசு மருத்துவமனையினை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக மேம்படுத்த கூடுதல் மருத்துவமனை கட்டடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டி, மாணிக்கம்பாளையம் அரசு துணை செவிலியர் பயிற்சிப்பள்ளி மாணவியர் விடுதி கூடுதல் கட்டடத்தை திறந்து வைத்தார்.

திருச்செங்கோடு அரசு மருத்துவமனையினை ரூ.23.00 கோடி மதிப்பீட்டில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக மேம்படுத்த கூடுதல் மருத்துவமனை கட்டடமானது 5835 ச.மீட்டரில் தரைத்தளத்துடன் கூடிய 5 தளங்கள் கொண்ட கட்டடமாக கட்டப்படவுள்ளது. இக்கூடுதல் கட்டடத்தில் பொது மருத்துவம் புறநோயாளிகளின் பிரிவு, பொது அறுவை சிகிச்சை புறநோயாளிகளின் பிரிவு, எலும்பியல் புறநோயாளிகளின் பிரிவு, ஈசிஜி, எக்ஸ்ரே, பிசியோதெரபி, இயற்கை மருத்துவம், தோல் புறநோயாளிகளின் பிரிவு, பல் புறநோயாளிகளின் பிரிவு, குழந்தைகளுக்கான புறநோயாளிகளின் பிரிவு, காது, மூக்கு, தொண்டை சிகிச்சை பிரிவு, ஆப்தல் வார்டு, மகப்பேறு வார்டு, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு சிகிச்சை பிரிவு, குழந்தைகள் வார்டு, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் போன்ற வசதிகள் கொண்டு வரப்படவுள்ளது.

மாணிக்கம்பாளையம் அரசு துணை செவிலியர் பயிற்சிப்பள்ளி மாணவியர் விடுதி கூடுதல் கட்டடம்337.10 ச.மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இந்த மாணவியர் விடுதியில் 8 தங்கும் அறைகள் உள்ளன. மேலும் பொது கழிவறைகளுடன் கூடிய அனைத்து அடிப்படை வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மரு.ஆர்.இளங்கோ மகேஸ்வரன், இணை இயக்குநர்கள் மரு.விஜயலட்சுமி (சுகாதாரம்), மரு. ராஜ்மோகன் (மருத்துவம்), நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. சாந்தா அருள்மொழி, துணை இயக்குநர்கள் மரு. பூங்கொடி (சுகாதாரப்பணிகள்), மரு.வாசுதேவன் (காசநோய்), நகர்மன்ற தலைவர்கள் (திருச்செங்கோடு) நளினி சுரேஷ் பாபு, (பள்ளிபாளையம்) செல்வராஜ், (குமாரபாளையம்) விஜய் கண்ணன், நகர்மன்ற துணைத்தலைவர் (திருச்செங்கோடு) தா. கார்த்திகேயன், திருச்செங்கோடு ஒன்றியக் குழு பெருந்தலைவர் சுஜாதா தங்கவேல், மாவட்ட அவைத் தலைவர் ஆர். நடன சபாபதி மாவட்ட துணைச் செயலாளர் கே. மயில்சாமி, எம்.சாந்தி, பொருளாளர் எம்.ராஜாராம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.நடேசன், ஓ.ஆர்.செல்வராஜ், டி. ரங்கசாமி, எம்.வெங்கடாசலம், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.பி.சாமிநாதன், எஸ்.ஆர்.பழனியப்பன், சிவக்குமார், ஆர்.வேலுமணி, அ.ரவிச்சந்திரன், இந்திராணி மயில்சாமி,

நகரக் கழகச் செயலாளர்கள் அ.குமார், எம். செல்வம், எஸ்.ஞானசேகரன், ஒன்றியக் கழகச் செயலாளர் கே.செல்வராஜ் வட்டூர் ஜி.தங்கவேல் கு.பழனிவேல், பி.பி.தனராசு, கே. கே.சண்முகம், எம்.தங்கவேல், ஏ.பி.ஆர்.சண்முகம், என்.நாச்சிமுத்து, ஆர்.செல்வம், ஏ.இளங்கோவன், பேரூர்க் கழகச் செயலாளர்கள் மு.திருமலை, எஸ்.பி. கார்த்திக்ராஜ், மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் திருநங்கை ரியா,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாலாஜி, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் சுரேஷ் பாபு, மருத்துவ அலுவலர் மரு.மு. மோகன பானு, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அருள், உதவி பொறியாளர் ஏஞ்சலினா, மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள் உட்பட அரசுத்துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு கருத்துகளை வழங்கினார். இதில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச்செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் உள்பட மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.